**<u>அசல் வழக்கு எண். 82/2013</u>**

நாள் 11.06.2019

**Name: பன்னீர்செல்வம் (வா.சா.1)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

என்னுடன் பிறந்த சகோதரர் சூசை என்ற சின்னப்பன். அவர் உயிருடன் உள்ளார். என்னை பொதுவாக பன்னீர் என்றுதான் கூப்பிடுவார்கள். தாவா சொத்து நத்தம் வகையைச் சேர்ந்தது. தாவா சொத்தின் பழைய சர்வே எண்.202/1 அதன் மொத்த விஸ்தீர்ணம் 1 ஏக்கர் 71 சென்ட் என்றால் சரிதான். தாவா சொத்தில் 3 வீடுகள் உள்ளன. அதில் மேல்புறத்தில் 2 வீடும், கீழ்புறத்தில் 1 வீடும் உள்ளது. மேல்புறத்தில் உள்ள வீட்டில் வடபுறம் என் வீடு, தென்புறம் என் சகோதரர் வீடும் உள்ளது. கீழ்புறத்தில் உள்ள வீடு பிரதிவாதி வீடு. எனது வீடும், என் சகோதர் வீடு சர்வே எண்.202/4 மற்றும் 5ல் கட்டுப்பட்டதாகும். எனது வீட்டிற்கும் பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் சந்து உள்ளது. அதுதான் தகராறுக்குரிய சொத்தாகும். அந்த சந்தின் கிழமேல் அளவு சுமார் 6அடி இருக்கும். தென்வடல் அளவு சுமார் 172 அடி இருக்கும். இந்த சந்தை பொறுத்து ஏற்கனவே பிரதிவாதி என்மீதும், என் அண்ணன் மீதும் அவ.எண்.30/91 என்று தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு தள்ளுபடியாகி பிறகு அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி மேல்முறையீடு ஏ.எஸ்.92/94 என்ற எண்ணில் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை மீறி நான் நடந்ததாக பிரதிவாதி என்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இ.பி. எண்.40/2004ல் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனு சமூகம் நீதிமன்றத்தில் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அதன்பேரில் பிரதிவாதி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த பழைய வழக்கானது தாவா சொத்தில் நானும், எனது சகோதரும் அத்துமீறி பிரவேசிக்கக்கூாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். என் வீடு ஓட்டுவீடாகும். என் சகோதரர் வீடு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்ட வீடாகும். பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபார்த்து ஒரு வாசலும், தெற்கு பார்த்து ஒரு வாசலும் உள்ளது. எனது வீட்டிற்கு கிழக்கு பார்த்து ஒரு வாசலும், தெற்கு பார்த்து ஒரு வாசலும் உள்ளது. வழக்கு சொத்தை அளந்து பார்ப்பதற்கு அ.வ.எண்.30/91 என்ற வழக்கில் ஆணையர் நியனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரைபடம் எனது சகோதரர் வசம் உள்ளது. எனது சகோதரருக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை உண்டு. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை தாக்கல் செய்யாததற்கு காரணம் தெரியவில்லை. தாவா

சொத்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். அதற்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அளக்க வந்தபோது நானும் இருந்தேன். எனது வீட்டிற்கும், எனது சகோதரர் வீட்டிற்கும் மேற்கே சவுரி என்பவரிடமிருந்து எனது அண்ணன் கிரையம் வாங்கியுள்ளார். எனது அண்ணன் கிரையம் வாங்கிய இடத்திற்கும், தாவா சொத்திற்கும் இடையே எவ்வித அத்தும் இல்லை. கமிஷனர் அளக்கும்போது தாவா சொத்திற்கு 3 இடம் தள்ளி உள்ள ஒரு கல்லை வைத்து அளந்தார். அந்த கல் சர்வே கல்லா என்று எனக்குத் தெரியாது. கமிஷனர் வரைபடத்தில் 4, 5 என்ற எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது அது எதற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் கீழ்மேல் 30 காலடி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு காலடி என்பது 9 அங்குலம் ஆகும். 30 காலடி எதுவரைக்கும் உள்ளது என்று கமிஷனர் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வீடு கட்டப்பட்டு சுமார் 4 வருடம் இருக்கும். கமிஷனர் வந்து பார்வையிட்டபோது எல்லா வீடும் இருந்தது. எனக்கும், எனது சகோதரருக்கும் பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்பதை காட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து எனக்கு பாகத்தில் கிடைக்கப்பெற்றது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனது சகோதரருக்கும் பாகம் பிரித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் தகப்பனாரால் கிரையம் வாங்கப்பட்டு அவரால் அனுபவித்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கூடுதல் அளவு போட்டு ஏற்பட்டது என்றாலும், அதில் கண்ட அளவுகளின்படி தாவா சொத்து வா.சா.ஆ.1ல் கட்டுப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் 6 வரையுள்ள ஆவணங்களுக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தையும் சேர்த்து பிரதிவாதி அவர் மகனுக்கு 20.12.1989ல் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அதன்படி பிரதிவாதியின் மகன் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகனை இவ்வழக்கில் சேர்க்காததால் எனக்கு வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித அனுபவமும் எந்த காலத்திலும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஏற்கனவே பிரதிவாதியின் தகப்பனார் அனுபவித்து வந்து பிறகு பிரதிவாதி அனுபவித்து செட்டில்மெண்ட் அடிப்படையில் பிரதிவாதியின் மகன் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம்,பி,காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.